

## வாழ்த்துரை

துள்ளித் திரியும் முயல் குட்டி குழந்தைகளே
புள்ளிமான்கள் துள்ளி ஓடும் பூரிப்பை பார்
வெள்ளி மீன்கள் விளையாட்டை வேடிக்கை பார்
மலர்கள் மணக்கும் தோட்டத்திலே
பலர் முகம் சுளிக்க நெகிழிப் பூக்கள்
மலை மலையாய் குவியும் மேடு
மண்ணுக்கும் நீருக்கும் வருமே கேடு
சிந்திப்போம் செயல்படுவோம்



**வே. சரஸ்வதி**
பசுமை
இராமேஸ்வரம்

## முகவுரை

பூப்பது பசுமை இதழின் இரண்டாம் மலர்

மின்னுவது எங்கள் மாணவிகளின் திறன்

சிந்தனையில் உயர்வு

சமுதாயத்தின்பால் அன்பு

இயற்கையின் மேல் காதல்

என கவிதையாய், ஓவியமாய், கட்டுரையாய் மிளிர்வதில்

குதூகலம் கொள்கிறது இந்த ஆசிரிய நெஞ்சம்

வாழ்க வளர்க





LEARN AND SERVE

**வாழ்த்துக்கள்**

க. கமலா M.Sc, M.Ed

தலைமை ஆசிரியை

ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் மேல் நிலைப்பள்ளி

## சுற்றுச்சுழல் மன்றம்

விதை பந்துடன் ஆரம்பித்து பனை விதைத்தலுடன் முடிந்தது இம்மாதம்
எங்கள் எண்ணம் முழுவதும் பசுமை ……
வண்ண இதழின் மூலம் வெளி வருவது மாணவிகளின் திறமை

வாய்ப்பிருந்தால் திறமை வளரும் என்பது எண்ணம்
பசுமை இதழ் அதற்குண்டான அச்சாரம் என்பது திண்ணம்

சிந்தனை செம்மை, பள்ளி பசுமை, பசுமை உறுதிமொழி, ஒவிய போட்டி, மூலிகைத் தோட்டம், மாணவர் பங்களிப்பு என பரந்து விரிந்தது இம்மாத சுற்றுச்சுழல் மன்ற பணிகள்.

அதற்கு ஊக்கம் கொடுத்து எங்களை ஆக்கப்படுத்துவதில் பள்ளி தலைமை ஆசிரியையின் பங்களிப்பு போற்றத்தக்கது.
மாணவிகளின் திறமை மேன்மேலும் வளர வாழ்த்துக்கள்





**வாழ்க வளர்க**
**க. கோபிலட்சுமி B.A, M.P.Ed, M.Phil**
**ஒருங்கிணைப்பாளர், சுற்றுச்சுழல் மன்றம்**



## கடல்

ஆழிசூழ் உலகமென்று பெயரும் இட்டாய்
அலையடித்து ஆர்ப்பரித்து உணவும் தந்தாய்
முத்து மணி பவளமென செல்வம் தந்தாய்
முக்குளிக்க வந்தவர்க்கு முத்தும் தந்தாய்

தாழ்வழுத்த நிலையில் நீ சீற்றம் கொண்டாய்
வாழ்வளித்த உன் கோபம் மாற பிரார்த்தனை செய்தோம்
என்றும் உன் மடியில் நாங்கள் வாழ்வை கண்டோம்



- எம். ஆலன் மிர்சா
VII- B



## பிளாஸ்டிக்

மண்ணில் மக்காமல் பூமிக்கு கேடு தரும்

பூமியில் புதைந்து நீர் வளத்தை கெடுக்கும்

எரித்தால் காற்றில் கலந்து உயிரின கேடு தரும்

பிளாஸ்டிக் இல்லா உலகம் படைப்போம்

மண், நீர், மனித வளங்களை காப்போம்



ம.மோகனப்பிரியா

IX-A



## மழை நீர்

மறைந்து போன

குளம் குட்டை .........

உயிர்த்து மீள

உயிராய் நுழைந்தாய் ...........

எங்கும் ஆறு

தங்கி ஓட

பொங்கி எழுந்து

பசுமை ஆட

என்றும் நீ

எமக்கு வேண்டும் ...............

மழை ....!!!!



சீனி அப்சத் நிஸா
IX – B



## நீர்த் துளி

ஒரு துளி அமுது
தேனிகளுக்கு முக்கியம்
இரு துளி மருந்து
போலியோ ஒழிப்பிற்கு
முக்கியம்
மூன்று துளி உயிரணு
உயிர்ப் பெருக்கத்திற்கு
முக்கியம்
நான்கு துளி பன்னீர்
விழா வரவேற்ப்பிற்கு
முக்கியம்
ஐந்து துளி கண்ணீர்
தூய அன்பிற்கு முக்கியம்
ஆறு துளி விடம்
பாம்பின் பாதுகாப்பிற்கு
முக்கியம்

இப்படி இயற்கையோடு
இயைந்து போன
துளிகளின் ஆதி\யும்
அந்தமும் நீரே……
மனிதன் வாழும் உலகினும்
உள்ளடங்கி இருப்பது
எழுபது சதம் நீரை
ஒவ்வோரு துளியும்
நமக்கினி உயிர்  நீரே!
உலகிலுள்ளோர் இதை
உணர்வீரே ….
உயிர் நீரை சேமித்திடுவீரே
….
வரும் தலைமுறைக்கு ‘நீர்
வழி” காட்டுவீரே!



முத்து ப்ரீத்திகா செல்வி. ம
VII Std ‘B’ Section



## மரம் வளர்ப்போம்

மழை வாடினால் மரம் வளர்ப்பேன்

மரம் வாடினால் தண்ணீர் விடுவேன்

தண்ணீர் வாடினால் கண்ணீர் விடுவேன்

மனிதா

உன் உயிர் நிலை நீர்

வாடினால் உன் வாழ்வும் வாடும்

இனியாவது

மரம் வளர்ப்போம் மழை காப்போம்



வைஷ்ணவி

VIII std A sec




## நீயும் ஒரு ஆசிரியையே

பாலூட்டி வளர்ப்பவள் மட்டுமல்ல அன்னை
அமிழ்தம் போன்ற நீரைக் கொடுக்கிற நீயும் ஒரு அன்னையே!
மழையாய் பொழிந்து
ஆறுகளாய் ஓடி
கடலில் சங்கமித்து
வாழ்வியலைக் கற்றுத் தரும்
நீயும் ஓர் ஆசிரியையே



இனியா ஸ்ரீ
**VII Std B Section**



துளசி

எளிதாக கிடைக்கும் துளசியில் மகத்துவங்கள் ஏராளம். துளசிச் செடியை ஆரோக்கியமான மனிதன் தினமும் தின்று வந்தால் குடல், வயிறு, வாய் தொடர்பான பிரச்சினைகள் அவன் வாழ் நாள் முழுவதும் வராது. ஜீரண சக்தியும், புத்துணர்ச்சியையும் துளசி இலை மூலம் பெறலாம்.

வாய் துர்நாற்றத்தை போக்கும். நமது உடலுக்கான கிருமி நாசினியாக உட்கொள்ளலாம். துளசி இலையை போட்டு ஊறவைத்த நீரைத் தொடர்ந்து பருகி வந்தால் நீரிழிவு நோய் நம்மை அணுகாது. உடலின் வியர்வை நாற்றத்தை தவிர்க்க குளிக்கும் நீரில் முந்தைய நாளே கொஞ்சம் துளசி இலைகளைப்

போட்டு வைத்து குளித்தால் நாற்றம் நீங்கும். பல தோல் நோய்களை குணமடைய செய்யும் ஆற்றல் துளசிக்கு உண்டு.

துளசி இலைக்கு மனஇறுக்கம், நரம்புக்கோளாறு, ஞாபக மறதி, ஆஸ்துமா, இருமல் மற்றும் பிற தொண்டை நோய்களை உடனுக்குடன் குணமாக்கும் சக்தி உண்டு. துளசி இலைச் சாறில் தேன், இஞ்சி முதலியன கலந்து ஒரு தேக்கரண்டி அருந்தலாம்.



**சுஷ்மிதா.ஆ**
***VI – A***







## மூலிகைத் தோட்டம்

மூலிகைத் தோட்டம் முதன்மை கல்வி அலுவலர் திரு.க.முனுசாமி அவர்களின் கரங்களால் திறப்பு ………….!

அருகாமை கிடைக்கும்
அன்றாடம் பார்க்கும்
அரிய மூலிகைகள் …….
பாரம்பரிய சொத்துக்கள்
பழக்கப்படுத்தினால்
வளமாக்கும் வாழ்க்கையை
குணப்படுத்தும் பல நோய்களை ….
பழமைப் பாராட்டுவோம்…….
மகத்துவம் பெறுவோம் ……..



க. கோபிலட்சுமி **B.A, M.P.Ed, M.Phil**
ஒருங்கிணைப்பாளர்,
சுற்றுச்சூழல் மன்றம்



## விதைப்பந்துகள்

விளையாட்டு பந்து

நாம் விளையாடும் பந்து

விதையாலே செய்த அருமையான பந்து

பசுமைப் போற்றும் அழகான பந்து

இயற்கை காக்கும் பசுமைப் பந்து

மகிழம் வேப்பம் வளர்க்கும்

எம் பள்ளியின் விதைப் பந்து



பத்மா .T

XI B

# உலக கழிவறை தினம் – நவம்பர் 19

ஐ.நா அறிவிப்புக்கிணங்க, ஒவ்வொரு வருடமும் நவம்பர் 19-ம் தேதி, உலக கழிவறை தினமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் தற்போது வரை கழிப்பிட வசதி இல்லாததால் சுமார் 60 கோடி பேர் திறந்தவெளியைப் பயன் படுத்துவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலகளவில் 250 கோடி மக்களுக்கு சுகாதாரமான கழிவறை வசதிகள் இல்லை. இவர்களில் 110 கோடி மக்கள் திறந்தவெளியை கழிவறைகளாக பயன்படுத்துகின்றனர். தகுந்த கழிவறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் ஆண்டுதோறும் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளை காப்பாற்ற முடியும். இதனை வலியுறுத்தும் விதத்தில் நமது பள்ளியில் உலக கழிவறைத் தினத்தை முன்னிட்டு ஓவியப் போட்டி ஒன்று நவம்பர் 20, 2017அன்று நடத்தப்பட்டது. அன்றைய போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவிகளை தலைமை ஆசிரியை திருமதி. கமலா அவர்கள் பரிசுகள் அளித்து பாராட்டி ஊக்கப்படுத்தினார்.



முதல் பரிசு பெற்ற மாணவி நம்பீஸ்வரி




இரண்டாம் பரிசு பெற்ற மாணவி கவிப்பிரியா



போட்டியின்போது

**கட்டுரை ஆக்கம் – நம்பீஸ்வரி. S, IX Std C section**



## பசுமை உறுதிமொழி

நவம்பர் 21, 2017 அன்று பசுமை உறுதிமொழி கீழ்கண்டவாறு ஏற்கப்பட்டது

சுற்றுச் சூழல் மன்ற மாணவிகள் அனைவரும் இனி வரும் நாட்களில்

பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டை குறைத்துக் கொள்வோம்

துணிப்பைகளை நாங்களும் பயன்படுத்தி பெற்றோரையும் பயன்படுத்துமாறு வலியுறுத்துவோம்

இனி வரும் காலங்களில் எங்கள் இல்லங்களில் சிறு காய்கறி தோட்டம் மற்றும் மூலிகைத் தோட்டம் அமைப்போம் என உறுதி ஏற்கிறோம்



இதன் மூலம் இராமேஸ்வரத்தின் சுற்றுச்சுழலை காக்க முன் மாதிரியாக எங்கள் 50 குடும்பங்கள் விளங்கும் என சூழுரைக்கிறோம்.

ஹேமா.A

XI Std A Section






***வரைவு: ச. வித்யா ஸ்ரீ***

***VII Std 'A' Section***